**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அ.வ.எண். 381/2024 நாள்- 03.07.2026

**பி.வா.சா.2. சமுத்திரம்**

**குறுக்கு விசாரணை வாதி தரப்பில்**

நான் நல்லமங்கலத்தில் குடியிருந்து டெய்லராக வேலை பார்த்து வருகிறேன். என்னை சாட்சியம் அளிக்க 2 ம் பிரதிவாதி அழைத்து வந்தார். 2 ம் பிரதிவாதியும் நானும் ஒரே குலதெய்வத்தை கும்பிடுவோம் பங்காளி முறை வேண்டும். மற்ற பிரதிவாதிகள் என் தகப்பனார் வழியில் உறவினர்கள். கென்னடி, சுகுணா எனக்கு உறவினர்கள் இல்லை. நான் பிரதிவாதி வீட்டின் அருகில் வசித்து வருகிறேன் சொத்துக்கள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது கேள்விபட்டதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். தாவா சொத்தில் யாரும் வீடு கட்டவில்லை 2 மாதத்திற்கு முன்பாக பார்த்தா போது காலிமனையாகத்தான் இருந்தது. சுகுணா கணவர் தங்கதுரையை நீண்ட நாட்களுக்கு முன்பாக பார்த்துள்ளேன். அவர்கள் நூல் கண்டு வியாபாரம் செய்து வந்ததாக கேள்விபட்டுள்ளேன். தங்கதுரை தபசில் சொத்தில் வீடு, கடை கட்டியுள்ள விவரம் தெரியுமா என்று கேட்டால் கடை, வீடு கட்டவில்லை. கென்னடி தபசில் சொத்தை கல்ஊன்றி முள்வேலி கம்பி அமைத்துள்ள விவரம் எனக்கு தெரியாது. உண்மையிலேயே வழக்கு விவரம் எனக்கு தெரியாது என்றும் 2 ம் பிரதிவாதி அழைத்ததன் பெயரிலும் உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.